# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1982/7 - 2016 අගෝස්තු මස 30 වැනි අඟහරුවාදා - 2016.08.30

*1982/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராகிய எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விடயங்கள், கடமைகள் மற்றும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பன 2016, ஓகத்து 5 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் ஒப்படைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

டி. எம். சுவாமிநாதன்,
*சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,*
*மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள்*
*அமைச்சர்.*

*சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,*
*மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள்*
*அமைச்சு,*
*2016, ஓகத்து 25.*

**புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I*<br>*பணிகளும் கடமைகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்* | *நிரல் III*<br>*அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு அத்தியவசியமான சேவைகளை வழங்குவதுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல். | 1. ஆட்களுக்கும் ஆதனங்களுக்கும் கைத்தொழில்களுக்கும் புனர் வாழ்வளிப்பதற்கான அதிகார சபை (கிழக்கு மாகாண மாவட் டங்கள்) | ஆட்கள் ஆதனங்கள், கைத் தொழில்கள் புனர்வாழ் வளிப்பு அதிகார சபைச் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) |

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*பணிகளும் கடமைகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்* | *நிரல் III*<br>*அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| *2.* மோதல் நிலை காரணமாக சேதமுற்ற ஆதனங்களுக்கும், ஆட்களுக்கும், புனர் வாழ்வளிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br><br>*3.* பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஆட்களை சமூகத்தோடு மீளிணைப்பதற்கான உபாய முறைகளை அமுல்படுத்தல். | | |

*9- 535*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.